**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081664

1. District : மாவட்டம் தஞ்சாவூர் PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 8/2022 Date: நாள் 30.12.2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a) of PC Act, 1988 (as amended in 2018)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 27.12.2022 Date to : நாள் வரை 30.12.2022
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.15 hrs Time to : நேரம் வரை 10.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.12.2022 Time : நேரம் 11.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.12.2022 Time : நேரம் 13.00 hrs வழக்கு பதிவு செய்யப்பட்டது.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தமிழ் பல்கலைக் கழகம் காவல் நிலையம், தஞ்சாவூர். 300 meter வடக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (ப)·வெள்ளைச்சாமி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. [illegible] (late)
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 37 yrs (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Business Development Manager (g) Address : முகவரி No. 14, ராம மகேந்திரா நகர், சாந்தநாத் நகர், [illegible]புரம், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. மகேந்திரன்,
சிறப்பு உதவி ஆய்வாளர்,
தமிழ் பல்கலைக் கழகம் காவல் நிலையம், தஞ்சாவூர்.

8. Reasons for delay in reporting by the complainant/ Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

பணிந்து அனுப்பப்பட்டது

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், இன்று 30.12.2022 ஆம் தேதி காலை 11.30 மணியளவில் பணியில் இருந்தபோது தஞ்சாவூர், மெடிக்கல் காலேஜ் ரோடு, சுந்தரம் நகர், மங்களபுரம், No–14, ராமமகேஷ்வரி நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு.மு.வெள்ளைச்சாமி, என்பவர் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அலுவலகம் வந்து கொடுத்த அவரால் எழுதப்பட்ட புகாரைப் பெற்று அந்த புகாரில் உள்ள குற்ற அலுவலரின் முன் நடத்தைப்பற்றி இரகசியமாக விசாரித்து புகாரின்பேரில் வழக்குப் பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புதல்:– மு.வெள்ளைச்சாமி[வயது 37/2022] த/பெ.M.முருகையன், No–14; ராமமகேஷ்வரி நகர்; சுந்தரம் நகர், மங்களபுரம்; மெடிக்கல் காலேஜ் ரோடு; தஞ்சாவூர் –613004. பெறுநர்:– காவல் ஆய்வாளர் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு; தஞ்சாவூர். அம்மா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.Wellaisamy 30/12/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.12.2022 /16.00 hrs.

Name: பெயர் P. PADMAVATHI
Rank: நிலை Inspector of Police, VAC, Thanjavur.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

வருகிறேன். எனது சொந்த ஊர் நாஞ்சிக்கோட்டை பஞ்சாயத்தில் உள்ள கூத்தன்சேரி ஆகும். எனது தந்தை திரு.M.முருகையன் EB-ல் போர்மேனாக வேலை பார்த்து 2003-ல் விருப்ப ஓய்வு பெற்று 2021-ல் இறந்து விட்டார். நான் M.Sc [Bio-Chemistry] படித்துவிட்டு தற்போது பெங்களூரை தலைமையகமாகக் கொண்ட Medgenome Labs Ltd என்ற நிறுவனத்தின் திருச்சி, தஞ்சாவூருக்கு Business Development Manager-ஆக பணிபுரிந்து வருகிறேன். எங்களது அக்கா லட்சுமிக்கு திருமணமாகி அவரது குடும்பத்துடன் தஞ்சாவூர் EB-காலனியில் வசித்து வருகிறார். எங்களது தந்தை எங்களுக்கு 2009-ம் ஆண்டு சொத்துக்களை 4- ஆண் பிள்ளைகளுக்கும் பாகப்பிரிவினை செய்து கொடுத்துவிட்டார். எங்கள் தந்தை இறந்த பிறகு எங்கள் அக்கா லட்சுமியும் எங்க அம்மாவும் சொத்து தொடர்பாக அடிக்கடி எங்களிடம் ஏதாவது பிரச்சினை செய்து வந்தார்கள். நாங்கள் எதுவானாலும் பேசிக்கொள்ளலாம் என்று கூறி வந்தோம் மற்றபடி இது தொடர்பாக எங்களுக்குள் வேறெந்த பிரச்சினையும் இல்லை. இந்நிலையில், 02-12-2022-ம் தேதி மதியம் 1 மணி சுமாருக்கு எனது அலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு தமிழ் பல்கலைகழகம் காவல் நிலையத்தில் இருந்து போலீஸ் பேசுவதாகவும் உங்க அம்மா ராஜேஸ்வரியை 4- மகன்களும் குடித்துவிட்டு வந்து அடித்துவிட்டதாக உங்கள் மீது பெட்டிசன் கொடுத்து இருக்கிறார்கள். எனவே நீங்கள் எல்லாம் விசாரணைக்கு தமிழ் பல்கலைக்கழக காவல் நிலையத்திற்கு வரவேண்டும் என்று கூறினார். நானும் என் அண்ணன் செந்தில்குமாரும் அன்று மாலை 4-மணி சுமாருக்கு Tamil University காவல் நிலையம் சென்று SSI. மகேந்திரன் அவர்களை சந்தித்தபோது உன் அம்மா உன் மீதும் உன் அண்ணன் தம்பி மீதும் புகார் கொடுத்துள்ளார்கள் ன்றும் சொன்னார். அதற்கு நான், நானும் செந்தில்குமார் மட்டும் ஊரில் இருக்கிறோம் அண்ணன் பூனேயில் வேலை பார்ப்பதாகவும் தம்பி ஹரிஹரசுதன் சென்னையில் வேலை பார்க்கிறார் என்றும் நாங்க யாரும் எங்க அம்மாவை அடிக்கலைன்னும் நீங்களே வந்து விசாரிச்சுக்கங்கன்னும் சொன்னோம். உடனே எங்களை அனுப்பிவிட்டார். அதன் பிறகு சுமார் 2 மணி நேரம் கழித்து 6382456394 என்ற அலைபேசியில் இருந்து என்னைத் தொடர்புகொண்டு நீங்கள் உங்க அம்மா கொடுத்த புகார் தொடர்பாக உங்கள் மீது FIR போடப்பட்டு உள்ளது என்றும் Nonbailable Case-ன்றதனால சனி, ஞாயிறு பெயில் எடுக்க முடியாது அதனால நீங்க இரண்டு நாளைக்கு வீட்டிற்கு போகாமல் வெளியில் தங்கி கொள்ளுங்கள். நான் வீட்டிற்கு வந்து பார்க்கும்போது நீங்கள் யாரும் வீட்டில் இருக்கக்கூடாது என்று சொன்னார். அண்ணன் செந்தில் EB-ல் வேலை பார்ப்பதால் வேலைக்கு பிரச்சனை வரும் என்று சொன்னதால் நாங்கள் பயந்து கொண்டிருந்தோம். அதன் பிறகு நான் வேலைக்கு சென்றுவிட்டேன். இந்த விஷயம் தொடர்பாக என்னிடம் 6-12-22ந் தேதி காலையிலேயே அலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய SSI. மகேந்திரன் அவர்கள் உங்கள் மீதான FIRஐ MF செய்து விடுவதாகவும் அதற்கு செலவாகும் என்று கூறினார். மீண்டும் 26-12-2022 அன்று SSI மகேந்திரன் அவர்கள் என்னைத் தொடர்புக்கொண்டு எங்கள் அம்மா SPகிட்ட கொடுத்த புகார் தொடர்பாக நீங்கள் DSP officeக்கு வாங்கன்னு சொன்னார். நாங்கள் விசாரணைக்கு வந்துவிட்டு சென்றுவிட்டோம். மறுநாள் 27-12-22 அன்று இரவு 07.15 மணிக்கு அலைபேசியில் தொடர்பு

கொண்டு பேசியபோது SSI மகேந்திரன் அவர்கள் ரூபாய் 20,000/– பணத்தை ரெடி பண்ணிட்டு 28–12–22 அன்று காலை 10.00 மணிக்கு பேசுன்னு சொல்லிட்டு போனை துண்டித்து விட்டார். இந்நிலையில், கடந்த 28–12–2022 அன்று காலை SSI. மகேந்திரன் எனக்கு போன் செய்து என்னை ராமநாதன் ரவுண்டானா அருகில் வரசொன்னார். நான் அவரை அங்கு சென்று நேரில் சந்தித்தபோது மறுபடியும் FIR பற்றியும் எங்களை அரஸ்ட் பண்ணாமல் இருக்கவும் வழக்கை MF செய்து கொடுப்பதாகவும் அதற்கு அவர் கேட்ட பணத்தை தரும்படி கேட்டார். நான் பணம் கிடைக்கவில்லை என்றும் என் நிலைமையை கூறினேன். அதற்கு அவர் என்னிடம் எனக்கும், எனது 2 அண்ணன்கள் மற்றும் எனது தம்பி ஆக நான்கு பேருக்கும் தலா ரூ.2500/– என மொத்தம் ரூ.10,000/– கொடுத்துடுன்னு கேட்டார். நான் என்னிடம் இப்போது பணம் இல்லை, இன்னும் சம்பளமும் வரலை யார்கிட்டயாவது கடன்தான் வாங்கனும் என்று சொன்னேன். அதற்கு அவர் நான் இப்போது CM Dutyக்கு திருச்சி போகிறேன். நான் வெள்ளிக்கிழமைதான் வருவேன் நீ அதற்குள்ள பணத்தை ரெடிபண்ணிடு நான் வந்துட்டு உனக்கு போன் பன்றேன்னு சொல்லிட்டு என்னை அனுப்பிவிட்டார். அதன் பிறகு நான் அவர் கூப்பிட்டா பார்த்துக்கலாம் என்று இருந்துவிட்டேன். SSI மகேந்திரன் அவர்கள் இன்று 30–12–22 வெள்ளிக்கிழமை காலை சுமார் 10.30 மணியளவில் என்னை போனில் அழைத்து நான் Busyயா இருந்தாலும் நீ எனக்கு போன் பண்ணு. நான் மதியம் 3 மணிக்கெல்லாம் வேலைக்கு வந்துருவேன் நீ 10,000/– ரூபாய் பணத்தோட வந்துடுன்னு சொன்னார். எங்க Case–ஐ MF செய்து தருவதாக கூறி என்னிடம் ரூபாய் 10,000 லஞ்சம் கேட்ட தமிழ் பல்கலைக்கழக காவல் நிலைய SSI மகேந்திரன் என்பவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லாதால் மேற்படி SSI மகேந்திரன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். தேதி:– 30–12–2022 இடம்:–தஞ்சாவூர் இப்படிக்கு Sd/–M.VELLAISAMY, 30/12/2022. மேற்படி புகாரைப் பெற்று, புகாரின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திய பின்பு, புகார்தாரர் மற்றும் எதிரியின் நன்னடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்தும், புகாரின்பேரில் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்: 8/2022 U/s 7 (a) of Prevention of Corruption Act 1988 (as amended in 2018)–ன்படி 30.12.2022ந் தேதி 13.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

P. Padmavathi 30/12/2022 FNy

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு மற்றும் இணைப்புடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒருநகல் விசாரணைக்கும் வைக்கப்பட்டது.

P. Padmavathi 30/12/2022 FNy

(P. PADMAVATHI)

VXAC, Thanjavur.